# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம்

*[1994, திசெம்பர் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

***அரசின் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

---

*1994, திசெம்பர் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

---

*கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : சதம் 75** *தபாற் செலவு : ரூபா 1.00*

**1994 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம்**

[1994, திசெம்பர் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**எ. வ.—ஒ 75/93**

**1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகை வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டத்தின் விரிவுப் பெயர் முறையே "1989 ஏப்பிறில் 1 ஆம் திகதியன்றும் 1990 ஏப்றில் 1 ஆம் திகதியன்றும், 1991 ஏப்றில் 1 ஆம் திகதியன்றும், 1992 ஏப்றில் 1 ஆம் திகதியன்றும் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுகளுக்கான" என்னும் சொற்களுக்கும், இலக்கங்களுக்கும் பதிலாக, "முறையே 1989 ஏப்றில் 1 ஆம் திகதியன்றும், 1990 ஏப்றில் 1 ஆம் திகதியன்றும், 1991 ஏப்றில் 1 ஆம் திகதியன்றும், 1992 ஏப்றில் 1 ஆம் திகதியன்றும், 1993 ஏப்றில் 1 ஆம் திகதியன்றும் அத்துடன் 1994 ஏப்றில் 1 ஆம் திகதியன்றும் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுகளுக்கான" என்னும் சொற்களையும், இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்திற்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு "ஆனால் 1994 மார்ச் 31 ஆம் திகதிக்கும் பிந்தாமல் முடிவடைகின்ற" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1995 மார்ச் 31 ஆம் திகதிக்கும் பிந்தாமல் முடிவடைகின்ற" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (iv) ஆம் பந்தியில் "1992 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்கும், இலக்கங்களுக்கும் பதிலாக "1992 ஆம் ஆண்டு ஏப்றில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (V) ஆம் பந்தியில், "1993 ஏப்பிறில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும் ;" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1993 ஏப்றில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும் ; அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (v) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(vi) 1994 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு அவரால் செலுத்தப்படற்பாலதான மிகை வரித்தொகையின் —

(அ) ஐம்பது சதவீதத்துக்குக் குறையாத தொகையை, 1994 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும் ;".

(ஆ) மிகுதியை 1994 நவெம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்,"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "ஊதியத்திலிருந்து ஏழைச் சதவீதத்தையும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஊதியத்திலிருந்து ஏழைச் சதவீதத்தையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "ஊதியத்திலிருந்து ஏழைச் சதவீதத்தையும் ;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஊதியத்திலிருந்து ஏழைச் சதவீதத்தையும் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஊ) 1994 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டுக்கு —

அவ்வூழியரின் ஊதியத்திலிருந்து அவ்வாண்டிற்குக் கழிக்கப்படற்பாலதான மொத்த வருமானவரியின் —

(i) அத்தகைய ஊழியருக்கு 1994 யூலை மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து ஏழைச் சதவீதத்தையும்; அத்துடன்

(ii) அத்தகைய ஊழியருக்கு 1994 அக்டோபர் மாதத்திற்குக் கொடுபடற்பாலதான ஊதியத்திலிருந்து ஏழைச் சதவீதத்தையும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பந்தியில் அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (ii) பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(ii) இச்சட்டத்தின்கீழ் இயைபான ஆண்டொன்றுக்கு மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகின்றவரான எவரேனும் ஆள் —

(அ) 1989 எப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு,

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் 1988 எப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியில் —

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1989 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும் ; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1989 நவம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

(ஆ) 1990 எப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு —

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1989 எப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் —

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1990 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்றும் அல்லது அதற்கு முன்னரும் ; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1990 நவெம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும் ;

(இ) 1991 எப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் இயைபான ஆண்டிற்கு —

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1990 எப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு —

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1991 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும் ;

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1991 நவெம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும் ;

3—ළ 033903 (94/10)

(அ) 1992 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு —

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1991 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின்

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 ஆகஸ்ட் 15ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1992 நவெம்பர் 15ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

(உ) 1993 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு —

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1992 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின்

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1993 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1993 நவெம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

(ஊ) 1994 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு —

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் 1993 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் —

(i) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1994 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்; அத்துடன்

(ii) ஏழரைச் சதவீதத்திற்குக் குறையாத தொகையை 1994 நவெம்பர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்;

அத்தகைய மிகைவரியாகச் செலுத்துமிடத்து,

1989 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் இயைபான ஆண்டின் விடயத்தில் 1990 நவெம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

1990 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1991 நவெம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

1991 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1992 நவெம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

1992 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1993 நவெம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

1993 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1994 நவெம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

1994 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டின் விடயத்தில் 1995 நவெம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

அவரால் செலுத்தப்பட்ட தொகைக்கு மேலாக இயைபான ஆண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான மிகைவரியை விஞ்சுகின்ற தொகையை அவர் செலுத்துவாராயின் 3 ஆம் பிரிவின்கீழ் எந்தக் கொடுப்பனவுகளைச் செய்யுமாறு அவர் தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்தக் கொடுப்பனவுகள் தொடர்பில் அத்தகைய ஆள் இப்பிரிவின்கீழான ஏதேனும் தண்டத்திற்கு ஆளானவராதல் ஆகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, "வருமான வரி" என்பதன் வரைவிலக்கணத்தின் (1) ஆம் பத்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் பத்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) வதிவுள்ள கம்பனியொன்றின் தொடர்பில் —

(அ) 1993 ஏப்றில் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் இயைபான ஆண்டுக்கு உண்ணாட்டரிறைச் சட்டத்தின் 33 (1) (அ) என்னும் பிரிவின்கீழ் அந்த இயைபான ஆண்டிற்கு அக்கம்பனியால் செலுத்தப்படற்பாலதான வருமான வரி என்று பொருள்படும்; அத்துடன்

(ஆ) 1993 ஏப்றில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற இயைபான ஆண்டிற்கு அக்கம்பனியால் —

(1) அச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பத்தியின்கீழ் அக்கம்பனியால் அந்த ஆண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியினதும், அத்துடன்

(ii) அச்சட்டத்தின் 82 ஆம் பிரிவின்கீழ் அல்லது 83 ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்தினதும் 85அ என்னும் பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் கழிப்பனவினதும்

கூட்டுமொத்தத்தை அதிலிருந்து கழித்தபின்னர், உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமான வரி என்று பொருள்படும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

6. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,887 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 365, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.